# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss

Postfach 439, 4528 Zuchwil

www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**10 வயதுப்பிரிவு**
(01.01.2009 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

## தமிழீழ விடுதலைப் போராட்டமும் பெண்களும்

வையக மாந்தரில் சரிபாதியினர் பெண்கள். எமது சமூகத்திலும் சரிபாதியினர் பெண்கள். இந்த சரிபாதி தொகையினரான பெண்கள் எமது போராட்டத்தில் பங்குபெறாது எமது தேசத்தின் விடுதலை என்பது சாத்தியமாகாது. பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் சாத்தியமாகாது என்பதைத் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தவர் எங்கள் தலைவர் மாமா.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களை அணிசேர்ப்பதன் ஊடாக பெண் விடுதலையையும், சமூக விடுதலையையும், தேச விடுதலையையும் சாத்தியமாக்கலாம் என அவர் உறுதியாக நம்பினார். தலைவர் மாமாவின் நம்பிக்கைக்குச் செயல் வடிவம் கொடுத்தனர் பெண்போராளிகள். வீரத்திலும், தியாகத்திலும், விடுதலை உணர்விலும் அதனை நிரூபித்துக் காட்டினார்கள்.

சமூகத் தளைகளுக்குள் கட்டுண்டு கிடந்த பெண்கள் தலை நிமிர்ந்தார்கள். போரியல், தலைமைத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், நிர்வாகம், அரசியல் என அனைத்திலும் ஆளுமை மிக்கவர்களாக விளங்கினார்கள். தரையிலும் கடலிலும் வியத்தகு சாதனைகளைப் படைத்து வல்லமையின் வடிவங்களாய்த் திகழ்ந்தார்கள்.

உடல்வலிமைக்கும் மனவலிமைக்கும் சவால் விடக்கூடிய பெரும் நெருப்பாறுகளைக் கடந்து 'எம்மால் முடியும்' என்று சரித்திரம் படைத்தார்கள். தாம் நேசித்த மக்களுக்காகத் தாம் வரித்துக் கொண்ட இலட்சியமாம் தமிழீழ தேசத்துக்காகத் தம் இன்னுயிர்களைக் கொடுத்தார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், இந்தியப்படைகளுடனான மோதலின்போது முதல் வித்தாய் வரலாறு படைத்தார் இரண்டாம் லெப்டினன் மாலதி. பதினாறு கடல்மைல்கள் நீரின் அடியால் நீந்திச் சென்று, காங்கேசன்துறையில் எதிரியின் கப்பலில் வெடிகுண்டு பொருத்தி, முதல் பெண் கடற்கரும்புலியாய் காவியம் படைத்தார் கப்டன் அங்கயற்கண்ணி. தாண்டிக்குளத்தில் இராணுவத்தின் விநியோக மையம் மீது கரும்புலித்தாக்குதல் நடாத்தி வீர வரலாறு எழுதினார் முதற் தரைக்கரும்புலி மேஜர் யாழினி.

தன் குழந்தையைச் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்துவிட்டு, கடற்புலியாய் காவியமானார் கப்டன் செந்தாரணி. பெண்போராளிகளைச் செதுக்கிடும் வல்ல தளபதிகளாய் தடம் பதித்து ஆனந்தபுர முற்றுகைச் சமரில் விதையானார்கள் பிரிகேடியர் விதுஷா மற்றும் பிரிகேடியர் துர்க்கா. தன் சகோதரியிடம் தனது குழந்தையை ஒப்படைத்து விட்டு, ஆனந்தபுரத்திலே புறநானூற்றைப் புதுப்பித்தார் கேணல் தமிழ்ச்செல்வி.

இத்தகைய ஆயிரமாயிரம் பெண்போராளிகளின் அர்ப்பணிப்புகளாலும், ஈகங்களாலும் வீறுகொண்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் வெல்வது உறுதி.

நன்றி,
வணக்கம்.